தேதி : 17.11.2022

அ.வ.எண். 237/2014

**வா.சா.1 மீண்டும் ஆஜர் சத்தியபிரமாண வாக்குமூலத்தின்பேரில் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :-**

வா.சா.ஆ,6 ல் சொத்து விபரப்படி சர்வே எண். 270/4 செண்ட் 60ல் தென்கடைசி 15 செண்ட்டிற்கு வடபுறம் கிழமேலாக 15 செண்ட் இடம் கிரையம் பெற்றதாக காட்டடப்பட்டுள்ளது என்றால் எனக்கு சரியாக தெரியாது அது என் அம்மா கிரையம் பெற்ற சொத்து. (**வா.சா.ஆ 6 ல் சொத்தின் விவரம் படித்து பார்க்க பிரதிவாதி வழக்கறிஞர் கூறியதற்கு படித்து பார்த்து கூறமுடியாது என்று சாட்சி கூறிவிட்டார்**.) வா.சா.ஆ 6 ன்படி தான் 7 வது தபசில் சொத்தை நாங்கள் உரிமை கோருகிறோம் என்றால் சரிதான். நிரூபண அபிடவிட்டில் நான் எனக்காகவும் மற்ற வாதிகளுக்காகவும் சேர்த்து தான் சாட்சி சொல்ல தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ 6 ல் உள்ள சொத்து விபரங்கள் எல்லாம் சரிதான் என்றால் ஆமாம். வா.சா.ஆ 6 சொத்து விபரங்களுக்கு மாறாக 7 வது தபசில் சொத்து பிராதில் காட்டியுள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 6 சொத்தின் விபரம் தவறுதலாக காட்டப்பட்டுள்ளது. வா.சா.ஆ 6 சொத்தின் விபரம் தவறாக காட்டப்பட்டுள்ளது என்று பிராதில் கூறியுள்ளேனா என்றால் கூறவில்லை. 6 வது தபசில் சொத்து பாத்தியம் இல்லாத நபரிடமிருந்து கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் பெயரில் உள்ள கூட்டுப்பட்டாவை ரத்து செய்து நான் எங்கள் பெயரில் தனிப்பட்டா வாங்கியதன் மூலம் 6 வது மற்றும் 7 வது தபசில் சொத்து எங்களுக்கு உரிமை ஏற்படாது என்றால் சரியல்ல. பிராதில் 6,7 தபசில் சொத்து எங்களுக்கு எப்படி பாத்தியப்பட்டது என்பதற்கு மாறாக கோட்டாட்சியர் விசாரணையில் கூறி பட்டா பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல.

2) வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் எனக்கு ஞாபகமில்லை. சொத்தின் விபரங்களை பற்றி மற்ற ஆவணங்களை பற்றிய விபரங்கள் எனக்கு சரியாக தெரியாது எனது அப்பாவிற்கு தான் தெரியும் என்றால் சரிதான். சொத்து விபரத்திற்கு மால்கள் மற்றும் அளவுகள் சரியாக கூறவில்லை என்றால் சரியல்ல. 6 வது தபசில் சொத்து எந்த காலத்திலும் குத்தால

பாண்டியன் மற்றும் தங்கப்பாண்டியனுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. எனவே பாத்தியம் இல்லாத நபர்களிடமிருந்து 6 வது தபசில் சொத்தை நாங்கள் கிரையம் பெற்றது எந்த உரிமையும் எங்களுக்கு ஏற்படாது என்றால் சரியல்ல. 7 வது தபசில் சொத்தில் எங்களுக்கு விற்பனை செய்த பெரியதாய் உயிருடன் இருக்கிறாரா என்றால் இருக்கிறார். வா.சா.ஆ 6 ல் உள்ள சொத்தின் விபரத்தை சீர்திருத்தம் செய்யக்கோரி பெரியதாயிடம் கேட்டோமா என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ 6 ல் உள்ள சொத்தின் விபரம் சரியான முறையில்தான் கொடுக்கப்பட்டுள்ளது இந்த வழக்கிற்காக சொத்தின் விபரம் தவறாக இருக்கிறது என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 6 ல் ஆவணத்தில் உள்ள சொத்து விபரங்களுக்கு மாறாக கட்சிசெய்வதற்கு ஆவணம் முரன்தடை ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ 6 நாங்கள் கிரையம் பெற்ற பெரியதாயிடமிருந்து தான் இந்த பிரதிவாதி கிரையம் பெற்றார் என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்க்கவில்லை. பெரியதாய் பிரதிவாதிகளுக்கு விற்பனை செய்த சொத்திற்காக காவல் நிலையத்தில் பெரியதாயின் மீது புகார் கொடுத்தேனா என்றால் எனது அப்பா தான் புகார் கொடுத்தார். பெரியதாயை இந்த வழக்கில் கட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். 2ம் வாதி சுவாமிநாதன் ஆசிரியராக பணியாற்றுகிறார் என்றால் சரிதான். நான் டாஸ்மார்க்கில் சேல்ஸ்மேனாக வேலை செய்கிறேன். 4ம் வாதி முத்துக்குமார் அரசு பேருந்தில் டிரைவராக வேலை பார்த்து வருகிறார். 5ம் வாதி எனது அப்பா பஞ்சாயத்து யூனியனில் துணை வட்டார வளர்ச்சி அலுவலராக பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார். நாங்கள் அனைவரும் அரசு அலவலகத்தில் வேலை செய்து வருவதால் கோட்டாட்சியரிடமிருந்து செல்வாக்கு பெற்று பட்டா வாங்கி விட்டோம் என்றால் சரியல்ல. பிரதிவாதி பெற்ற கிரைய ஆவணங்கள் மற்றும் 1ம் பிரதிவாதி பெற்ற சீர்திருத்த ஆவணம் ஆகியவைகள் உண்மையான நபர்களிடம் கிரையம் பெற்ற ஆவணம் என்பதால் மேற்படி ஆவணங்கள் சட்டப்படி செல்லக்கூடிய ஆவணங்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் கோராமல் நிரந்தர உறுத்துக்கட்டை பரிகாரம் கோரியுள்ளதால் இந்த வழக்கு சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் சுத்தமான கரங்களுடன் நீதிமன்றத்தை நாடவில்லை என்றால் சரியல்ல.

எனவே வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. எனது வழக்கு உண்மையான வழக்கு அல்ல எனவே வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**